ஸ்ரீ

# ஓராண்வழி ஆசாரியர்கள் வாழித்திருநாமம்

## நம்மாழ்வார்

திருக்குருகூர்த்திருப்புளியில் வளர்ந்தபிரான்வாழியே.
சேமங்கொள்தென்மறைகள் வெளியிட்டான்வாழியே.
பெருக்கமுற்றவடிநிலையாய் வந்துதித்தான்வாழியே.
பெருநிலைகள்மதுரகவிக் கருள்புரிந்தோன்வாழியே.
கருத்துடைநாதமுனிக்குங் கருணைசெய்தான்வாழியே.
குருக்களுக்குத்திலகமெனக் கூறநின்றான்வாழியே.
குருகூரன்சடகோபன் குலத்தாள்வாழியே.

## நாதமுனிகள்

சேமங்கொள் வீரநாராயணபுரத்தான்வாழியே.
செல்வமுற்றும்ஆனிதனில் அனிடத்தான்வாழியே.
தேமருவுதென்குருகூர் நகரமர்ந்தான்வாழியே.
தேசுமிகு சடகோபன் சரணடைந்தான்வாழியே.
நாமுய்யநாலாயிரத்தின் பொருளளித்தான்வாழியே.
நன்றுகத்தாளத்தி லிசைத்துரைத்தான்வாழியே.
சீர்முகுத்தயோகமுடைச் செல்வனார்வாழியே.
திருப்பொலிந்தநாதமுனி திருவடிகள்வாழியே.

## உய்யக்கொண்டார்

எந்தாதைநாதமுனி யிணையடியோன்வாழியே.
ஏராரும்சித்திரையில் கார்த்திகையான்வாழியே.
நந்தாமல்நாதமுனி நலம்புகழ்வோன்வாழியே.
நாலிரண்டுமையைந்து நன்றளித்தான்வாழியே.
செந்தாதார்வெள்ளறையிற் சிறக்கவந்தோன்வாழியே.
சேமமணக்கால்நம்பிக் கருள்புரிந்தோன்வாழியே.
சந்தாமல்தரிசனத்தை விளங்குவித்தான்வாழியே.
தேசுறுமுய்யக்கொண்டார் சேவடிகள்வாழியே.

## மணக்கால் நம்பிகள்

உய்யக்கொண்டாரடியை யுகந்தடைந்தோன்வாழியே.
ஒப்பில்மணக்காற்பதியி லுதித்தருள்வோன்வாழியே.
துய்யகும்பமகநாளிற் றோன்றலுற்றோன்வாழியே.
துயரில்குணக்குழுவாகிச் சகம்புகழ்ந்தோன்வாழியே.
ஐயமறஆளவந்தார்க் கருள்புரிந்தோன்வாழியே.
அவர்ப்பணியவரங்கனடி நிதிகொடுத்தான்வாழியே.
செய்யதமிழ்மாலைகளைச் சிந்திப்போன்வாழியே.
சீர்மணக்கால்நம்பிகள்தம் சேவடிகள்வாழியே.

## ஸ்ரீ ஆளவந்தார்

நாகணையான்வீரநாராயணத்துதித்தான்வாழியே.
நற்கடகவுத்திராடத் தவதரித்தான்வாழியே.
போகமுறுமணக்காலான் பொன்னடியோன்வாழியே.

பொய்யாருங்குமதிமதப் பூண்டறுத்தான்வாழியே.
ஊகமுடைத்தத்வார்த்த நிலையிட்டான்வாழியே.
உடையவருமீடேற வுகந்திருந்தான்வாழியே.
அழகாருமாளவந்தா ரடியிணைதான்வாழியே.

## பெரிய நம்பிகள்

மணிமாடமதிளரங்கத் தவதரித்தான்வாழியே.
மார்கழியின்றகேட்டை மாணவந்தான்வாழியே.
குணமிகுந்தவாளவந்தார் அடிதொழுதோன்வாழியே.
குருக்களுக்குள்முக்கியனய்க் கூறநின்றான்வாழியே.
துணைகெழுசீர்ப்பராங்குசற்குத் தொண்டானான்வாழியே.
துன்பில்லாவுடையவர்க்குத் தேசிகன்றான்வாழியே.
மணமகிழுந்தத்துவத்தின் வளமளித்தான்வாழியே.
வண்புகழார்ப்பெரியநம்பி மலர்ப்பதங்கள்வாழியே.

## எம்பெருமானார்

சீராரும் பெரும்பூத்துர் சிறக்கவந்தோன்வாழியே.
சித்திரையில் ஆதிரைநாள் செகத்துதித்தோன்வாழியே.
ஆராதவருளாளர் அருளுடையோன்வாழியே.
அருமறைசொல்பெரியநம்பி அரிப்பணிந்தான்வாழியே.
ஏராரும் பாஷியத்தை யீன்றபிரான்வாழியே.
எழுபத்துநால்வரையும் எமக்களித்தான் வாழியே.
ஓராதபரசமயக்க்ருறும்பறுத்தான் வாழியே.
ஒளிதிகழுமெதிராசர் இணையடிகள் வாழியே.

## திருக்குருகைப்பிரான்பிள்ளான்

ஐப்பசியிற்பூராடத் தவதரித்தான்வாழியே.
அருட்கடலாயெதிராச ரடிபணிந்தான்வாழியே.
தப்பில்திருமலைநம்பி தநயன்றான்வாழியே.
தமிழ்மறையாறுயிரத்தால் தகவுரைத்தான்வாழியே.
ஒப்பிலாவுடையவருக் குணர்விற்செய்வாழியே.
ஒற்றியசோழியன்முதலோர்க் கோதுவித்தான்வாழியே.
செப்பமிகுவேதாந்தச் சீரறிந்தோன்வாழியே.
திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவடிகள்வாழியே.

## கிடாம்பியாச்சான்

அந்தமில்சீரெதிராச ரடிதொழுதோன்வாழியே.
ஆதரங்கொள்சித்திரையி லத்தத்தான்வாழியே.
இங்கிதனுயத்ரிகுலத் தழகமர்ந்தான்வாழியே.
எதிராசர்மகாநத்தே யேற்றமுற்றான்வாழியே.
செந்தமிழும்வடகலையுந் திகழ்நாவான்வாழியே.
சீரணியிராமா நுசன்புகழ்வோன்வாழியே.
சந்ததிக்குத்தவம்பலிக்கச் சதிர்த்தெழுந்தோன்வாழியே.
சார்வாங்கிடாம்பியாச்சான் தாளிணைகள்வாழியே.

## கிடாம்பிராமானுசப்புள்ளான்

தீதகல்கிடாம்பியாச்சானடியோன்வாழியே.
சித்திரைச்சீராதிரையில் செகத்துதித்தோன்வாழியே.

போதமார்ந்தப்பொற்கச்சிப் புரத்துவந்தான்வாழியே.
புறச்சமயப்பொய்ப்போதம் புடைத்தடித்தான்வாழியே.
ஆதரத்திற்பாடியத்தை யமர்ந்துறைப்போன்வாழியே.
ஆழ்வார்களருமறையு மாங்களிப்போன்வாழியே.
ஏதமில்சம்பிரதாய வெழிலெரிப்போன்வாழியே.
இராமாநுசப்புள்ளானிணையடிகள்வாழியே.

## கிடாம்பி ரங்கராச அப்புள்ளார்

இராமாநுசப்புள்ளானிணையடிகள்வாழியே.
ஈனமிலாப்பங்குனி யுரோகிணியான்வாழியே.
இராமாநுசன்கருத்தை யெடுத்துறைப்போன்வாழியே.
என்றுதையப்புள்ளா ரேத்தநின்றான்வாழியே.
பராங்குசன்தன்மறைப்பொருளைப் பயில்விப்பான்வாழியே.
பரம்பொருளைப்பணிவிக்கும் பனுவல்செய்தான்வாழியே.
அராநிகர்க்குங்குமதிகளை யழிக்குமவன்வாழியே.
அரங்கராசப்புள்ளானம்யுயத்தாள்வாழியே.

## நடாதூர் அம்மாள்

சுத்தகுணவிட்டுசித்தன் சுடரடியோன்வாழியே.
சுருதப்பிரகாசிகையைச் சொல்வித்தோன்வாழியே.
தத்துவப்ரமேயத்தின் சாரமீன்றான்வாழியே.
தகுதூரப்புற்பிள்ளைக்குத் தகவுரைத்தான்வாழியே.
புத்திமிகுசாரார்த்த சதுட்டயத்தோன்வாழியே.
புகழ்பாட்யப்பொருளைப் புதர்க்கீவோன்வாழியே.
சித்திரையிற்சித்திரைநாள் கச்சிவந்தோம்ன்வாழியே.
சீராருமம்மாள்தன் சேவடிகள்வாழியே.

## கிடாம்பி அப்புள்ளார்

எம்மரங்கராசரடி யெய்தினான்வாழியே.
ஏகந்தவுபதேச மீந்தபிரான்வாழியே.
சம்மதமாஞ்சரணநெறி சாதித்தான்வாழியே.
சதிரானஐப்பசிநற் சதயத்தடியோன்வாழியே.
வேதாந்ததேசிகனார் விரும்பநின்றான்வாழியே.
செம்மதமாங்யாயகுலிசம் அளித்தான்வாழியே.
சேமமாமப்புள்ளார் சீரடிகள்வாழியே.

## ஸ்ரீமத் வேதாந்ததேசிகன்

உத்தமமாம்புரட்டசி யோணத்தான்வாழியே.
ஒர்மதுரகவிபனுபவ லுள்ளுரைத்தான்வாழியே.
தத்தில்முனிவாகனபோகம் மிழைத்தான்வாழியே.
தமிழ்மறைக்கொண்பதினு யிரமுரைத்தான்வாழியே.
எத்திசையுமெதிவரர்ப்போ லேத்தநின்றான்வாழியே.
எழிலரங்கரின்னருளுக் கிலக்கானான்வாழியே.
தொத்தறவேவாதிகளைத் தொலைத்திட்டான்வாழியே.
தூப்புல்கோன்திருவடிகள் துலங்கவென்றுன்வாழியே.

கவிவாதிசிங்கமெனக் கண்ணுற்றான்வாழியே.
கலங்காதித்தரிசனத்தைக் காத்தளித்தான்வாழியே.
நவில்தருவேதாந்தத்தின் நல்லாசான்வாழியே.

நவையிலெல்லாத்தந்திரத்தின் சுதந்தரத்தான்வாழியே.
புவிகுளிரநூல்பலவும் புகன்றிட்டான்வாழியே.
புகரிலாதிரகசியப் பொருளுரைத்தான்வாழியே.
கவிபாய்வேங்கடத்திருமால் கவின்கண்டைவாழியே.
கலியாணகுணத்தூப்புற் காவலன்தாள்வாழியே.

நயினுராசாரியார்

இருவகையநிகமாந்தா ரியர்தநடன்வாழியே.
எதிபதிசித்தாந்தஜய மிலங்கவந்தோன்வாழியே.
அருள்வரதன்றிருநாம மணிந்துயர்ந்தோன்வாழியே.
ஆவணியுரோகிணியி லவதரித்தான்வாழியே.
அருமதிகாணுயர்சிந்தா மணியளித்தான்வாழியே.
அவ்வியலாநூல்பலவு மமைத்தநம்பிவாழியே.
ஒருதனியித்தரிசத்தை யுயர்த்தபிரான்வாழியே.
ஒண்டுப்புறகுலநயினு ரிணையடிகள்வாழியே.

ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஜீயர் திருவடிகளேசரணம்